O.S. No: 09/2022
பெயர்: சித்ரா
**பி.சா.1**
03-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 12.47**

**குறுக்கு விசாரணை**

எதிர் வழக்குரை தாக்கல் செய்ய நான் தான் விவரம் சொன்னேன். நீதிமன்றத்தில் முதல் விசாரணை சாட்சியம் தாக்கல் செய்ய நான் தான் விவரம் சொன்னேன். என்னுடைய கவணரின் மூத்த சகோதரர் மனோகர். அவர் எங்கள் ஊரிலேயே உள்ளார். வாதி சகுந்தலாவை இந்த ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு 10 வருடம் முன்பே தெரியும். அவர்கள் புத்தக கம்பெனி வைத்து நடத்துகிறார்கள். பெரிய மிராசுதார். நிறைய நிலபுலன்கள் உண்டு. சார்பதிவாளர் அலுவலத்தில் நான் கையெழுத்து போட்ட போது என்னுடைய கணவரும் , சகோதரர் மனோகரனும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் ஆமாம். பின்னர் சாட்சி நாங்கள் என் வீட்டில் வைத்து தான் இந்த கையெழுத்தை போட்டோம் என்று சொல்கிறார். நான் வீடு சம்மந்தமாக கணவருக்கு கொடுத்திருந்த பவர் பத்திரத்தை சகுந்தலாவிடம் கொடுத்தேன். அடையாளத்திற்கு ஆதார் கார்டு, ஓட்டர் ஐடி கொடுத்தேன். வீடு சம்மந்தமாக என் வீட்டுக்காரருக்கு விடுதலை பத்திரம் எழுதிக்கொடுததன் அசல் பத்திரத்தை சகுந்தலாவிடம் கொடுத்தேன். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் மனு கொடுத்து பார்வையிட்டேனா என்றால் இல்லை. நான் வாதியிடம் வாங்கிய கடனை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக எதிர் வழக்குரையில் ஒரு கட்சியும் , பிரமாண வாக்குமூலத்தில் ஒரு கட்சியும் என்று மாற்றி மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரூ.25,00,000 வாதியிடம் கடனாக பெற்றுக்கொண்டு முறையாக பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக மறைக்கிறேன் என்றால் சரியல்ல. சார் பதிவளார் அலுவலகத்தில் நான் நேரடியாக போய் கையெழுத்து மற்றும் கைரேகை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கிற்காக நான் சார்பதிவாளர் அலுவலகமே போகவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.